
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 10 FEBRUARY 1997 இதழ் - 2



வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு
அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1

வெளியிடுவோர் :

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. கிறிஸ்தவம் பிரிவினையற்றது சிதறல்களின் ஒட்டல்ல 1
2. தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வேதாகமம் 8
3. பெண்கள் பகுதி 11
4. நீ ஏன் ஒரு கிறஸ்தவனாக இருக்கிறாய்? 13
5. எல்லாவற்றையும் அறியும் தேவன் 16
6. சபை தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டது 19
7. பிரசங்கி பிரசங்க வாக்கியத்தை எப்படி தெரிந்து கொள்வது 24
8. புதிய ஏற்பாடு சபை 27
9. விசுவாசத்தின் அடிப்படைகள் 29

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 10 FEBRUARY - 1997 ISSUE - 2

## கிறிஸ்தவம் பிரிவினையற்றது - சிதறல்களின் ஒட்டல்ல

"கார் ஒன்று இந்த பக்கமாக வந்ததா? பதட்டமாகக் கேட்டார் முதியவர் ஒருவர். பதில் வரவில்லை மாறாக அங்கிருந்து கேள்விகள் தான் வந்தன காரா? என்ன கார்? மாருதியா? அம்பாஸிடரா? பியட்டா? - இது இளைஞன் ஒருவனின் கேள்விக்கணைகள். "அதெல்லாம் இல்லை, கார் அவ்வளவு தான்" சற்று எரிச்சலுடன் சொன்னார் பெரியவர்.

"என்னையா கோபப்படுகிறீர்? என்ன கார் என்று சொல்லாமல் கார், கார் என்றால் என்ன பதில் சொல்வது? எத்தனையோ ரகமான கார்கள் வருகின்றன போகின்றன. என்ன கார் என்று சொன்னால் தானே சரியாகப் பதில் தரமுடியும்?" இது இளைஞனின் சமாதான விளக்கம்.

இருவருமே தங்கள் தங்கள் சூழ்நிலையில் நியாயமாகத்தான் நடந்து கொண்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது. முதல் முதலில் கார்கள் மார்க்கெட்டுக்கு வந்தபோது எல்லாக் கார்களும், ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. அந்நாட்களில் கார் என்றால் பொது மக்கள் புரிந்து கொள்வார்கள். இன்று அப்படியல்ல; தற்காலத்தில் புதிய புதிய கம்பெனிகள் புதுப்புது ரகமான கார்களை உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்குள் விடுகின்றனர். ஆகவே

இளைஞன் பதில் கொடுக்க முடியாமல் தடுமாறினான். அது அவனுடைய குற்றமன்று.

கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இதுவே நிலைமை. அன்றொரு நாள், நடுத்தர வயது உள்ளவர், பார்த்தால் படித்து உத்தியோகம் பார்ப்பவர் போல் தோற்றம். நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர் என்று கேட்டார்.

நான் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன் என்று மரியாதையாகத் தான் சொன்னேன். அவருக்கு கொஞ்சம் வருத்தம் அதைக் காட்டிக் கொள்ளாமல் அதுசரி ஐயா, எந்த ஐக்கியம் என்று தான் கேட்டேன் என்றார். ஐக்கியம் அது இது எல்லாம் இல்லை. கிறிஸ்துவின் சபை, அவ்வளவுதான் என்றேன். அப்படியானால் நாங்கள் எல்லாம் சாத்தான் சபைகளா? என்று கோபித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விட்டார்.

பரிசுத்த வேதாகமத்தில் பல சபைகளைப் பற்றி பிரஸ்தாபம் கிடையாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மக்களிடையேயும் வேற்றுமை கிடையாது. ஒரே சபை (எபே 4:4) கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு கீழ்படிந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் (அப் 11:26.)

ஆனால் அந்த நிலை மாறி வீதிக்கொரு சபை ஆளுக்கொரு உபதேசம் என்ற நிலை வந்து விட்டது. ஆகவேதான் அந்த மனிதர் கோபப்பட்டுக் கொண்டார். அது தற்காலத்தில் வாழுகின்ற நம்முடைய குற்றமன்று ஏனெனில் நாம் இந்த பிரிவினை வாதத்தை உருவாக்கவில்லை. பல சபைகள் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கிற காலத்தில் நாம் பிறந்திருக்கிறோம். பிரிவினை வாதத்தை நாம் நம்முடைய முன்னோர்களிடமிருந்து பூர்விக சொத்தாக பெற்றுக் கொண்டிருக்கிறோம். விரும்புகிறோமோ, இல்லையோ நாம் தோன்றுவதற்கு முன்னரே பல சபைகள் என்ற நிலை நன்கு வேர்விட்டு தழைத்து நிற்கிறது. அதன் நிழலில் நாம் அண்டிக் கொண்டிருக்கிறோம். தந்தையும், தாத்தாவும் ஏற்றுக்கொண்டனர். நாமும் பின்பற்றுகிறோம்.

இப்படிப்பட்ட காரணங்களால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரே சபை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது சற்றுக் கடினமாகத் தோன்றுகிறது. இருப்பினும் முயன்று உண்மையைக் கண்டு பிடிப்போம் ஏனெனில் எல்லவாற்றையும் சோதித்துப் பார்க்கும்படியும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியும் நமக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கிறது. (1 தெச 5:21; யோவான் 5:39; அப் 17:11).

இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். அப் 2:47. எந்த சபையில்? சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் என்று அப் 8:3ல் வாசிக்கிறோம் எந்த சபையை? எப்படி கார் கண்டுபிடித்த நாட்களில் கார் என்றால் மக்கள் எளிதில் புரிந்து கொண்டார்களோ அவ்வாறே சபை என்று வேதம் குறிப்பிடும்போது ஒரே சபையைத்தான் குறிப்பிடுகிறது என்று கொள்ள வேண்டும். இயேசு "என் சபையைக் கட்டுவன்" என்று ஒருமையில் தான் சொன்னார் (மத் 16:18) அதாவது நான் "கிறிஸ்தவத்தை ஸ்தாபித்தேன்" என்றார். இயேசு சபையில் அன்பு கூர்ந்து .... தம்மைத்தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார் "என்று வாசிக்கிறோம். (எபே 5:25–27) வேதாகமத்தில் சபை என்றால் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள். உதாரணமாக இஸ்ரவேலரை "சபை" என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. ஏனெனில் தேவன் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துக் கொண்டார். (அப் 7:38) சவுல் சபையைத் துன்புறுத்தினான் என்று சொல்லும்போது சபையிலுள்ள ஆண்களையும், பெண்களையும் துன்புறுத்தினான் என்றே பொருள். (அப் 8:1–3) சபை என்பது ஆகுபெயர்; சபையிலுள்ள மக்களையே குறிக்கும். கட்டிடத்தைக் குறிக்காது சபை என்பது தேவனுடைய ஆவிக்குறிய மாளிகை. அது ஜீவனுள்ள கற்களால் ஆனது 1 பேதுரு 2:5 ஆகவே சபை என்றால் கிறிஸ்தவர்களையே குறிக்கும்.

மேலும் அப்போஸ்தலன் பவுல் அப் : 20:28ல் கூறும்போது இயேசு தம்முடைய இரத்தத்தை விலைக் கிரயமாகக் கொடுத்து சபையை வாங்கினார் என்று குறிப்பிடுகிறார். ஆகவே யார் எல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் சபையில் அங்கங்களாக, இருக்கிறார்கள். ஆகவே இயேசுவின் இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்ட அழைக்கப்பட்ட இரட்சிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களே இப்படி தேவன் அழைக்கப்பட்ட மக்களை, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்துக்குட் படுத்தியிருக்கிறார். (கொலோ 1:13) (சபைக்கு இன்னொரு பெயர் இராஜ்ஜியம் என்று அறிக) எவ்வாறு ஒரு குழந்தை பிறந்தால் தன்னுடைய தகப்பனாருடைய குடும்பத்துக்குள் சேர்த்துக்கொள்ளப்படுகிறதோ அதே போன்று மக்கள் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்கும்போது கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். யோவான் 3:3, 5 சபைக்கு இன்னும் ஒரு பெயர் கிறிஸ்துவின் சரீரம். (கொலோ 1:18)

மக்கள் ஆவியானவரின் உபதேசங்களைக் கேட்டு (வேத வசனங்களை) அவருடைய சரீரமாகிய சபைக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். (1 கொரி 12:13) வேதாகமத்தின்படி கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள். குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இராஜ்ஜியத்தின் பிரஜைகளாகிறார்கள் என்று பொருள் எந்த சபை என்ற பிரச்சனைக்கே இடம் இல்லை. ஏனெனில் வேதாகமத்தில் சபை ஒன்றுதான். ஆனால் இன்றைய உலகில் பல சபைகள் அவதாரம் எடுப்பதற்கு யார் காரணம்? ஒன்றாக இருந்த சபை இப்படி சின்னாபின்னமானது எப்படி? அதற்கு வேதாகமமே பதில் கூறுகிறது. வாசித்துப் பார்ப்போம்.

### 1. விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் :- 1 தீமோ 4:1

விசுவாசம் என்பதை ஆங்கிலவேதாகமம் "The faith" என்று குறிப்பிடுகிறது. (அப் 6:7; 13:8; 14:22 கலா 1:23.) அதாவது விசுவாசம் என்பது ஒருமை (எபே 4:5)

### 2. சுவிசேஷத்தைப் புரட்டுவார்கள் :- கலா 1:7

சுவிசேஷப்புரட்டு அபாயகரமானது ஏனெனில் சுவிசேஷமே கிறிஸ்துவின் இதயம் இதயத்துக்கு கேடுவந்தால் சரீரத்துக்கு ஆபத்து. அப்படிப்பட்ட புரட்டில் ஈடுபடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும், வானத்தில் இருந்து வந்த தேவதூதனாலும் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. கலா 1:8, 9) ஏனெனில் கிறிஸ்தவம் மாசுபடாமல் காக்கப்பட வேண்டும் என்பதே தேவசித்தம்.

### 3. ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் :- 2 தீமோ 4:3

ஜென்ம சுபாவமுள்ள மாந்தர்களின் எண்ணம் தேவசித்தத்துக்கு எதிர்திசையில் இயங்கும் தன்மையுள்ளது. (கலா 5:17) ஆகவே தேவ ஆலோசனைகள் பல மனிதர்களுக்கு பிடிக்காது. அதனால் தேவன் அவர்கள் பொய்யை விசுவாசிக்கும் ஆவியை அவர்களுக்குள் அனுப்புவார். (2 தெச 2:10–2.)

இப்படியாக மனிதர்கள் தூய கிறிஸ்தவத்தின் தன்மையைக் கறைபடுத்தி கட்டுக்கதைகளை விரும்பி ஏற்றுக்கொண்டார்கள்.

### 4. கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குவார்கள் :

அப்போஸ்தலன் பவுல் ரோம் நகரில் உள்ள சபையாருக்கு "சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும்,

இடறல்களையும் உண்டாக்கிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகவேண்டும்" என்று புத்தி சொல்லுகிறார். (ரோமர் 16:17.) அப்போஸ்தலன் யோவான் கூட, "கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன், ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால் ' அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். (2 யோ 9:11) இருந்தபோதிலும் தற்காலத்தில் மனிதர்கள் கிறிஸ்துவின் தூய உபதேசத்தை உதறித்தள்ளிவிட்டு தங்கள் மனம்போல் நடக்கின்றனர்.

**5. முதலாம் நூற்றாண்டு சபைக்குள் மாம்ச சிந்தையுள்ள மனிதர்கள் பிரிவினைவாதத்தைக் கொண்டு வந்து புகுத்தினர் :**

பவுல் கொரிந்து சபையாருக்கு கருத்து ஒருமித்தவர்களாகவும் பிரிவினையற்றவர்களாகவும் ஒருமனமும் ஒரு சிந்தையுள்ளவர்களாக சீர்பொருந்தியிருக்க வேண்டும். என்று புத்தி சொல்லுகிறார்; (Iகொரி 1:10.) ஆனால் பிரிவினைமார்க்கம் உருவானதே இங்கே தான் என்று எண்ணும்படி, நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன், நான் கோபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் தனித்தனி முத்திரை குத்திக்கொண்டு போர்க்கோலம் பூண்டனர். (1 கொரி 1:12) இந்தப்பிரிவினை வாதம். இயேசு கிறிஸ்துவும், பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல அவரைத் தொழுகிற மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தை அர்த்தமற்றதாக்கிவிட்டது. (யோவான் 17:20, 21) அப்போஸ்தலன் பவுல், சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ளவேண்டும் என்று உருக்கமாய்வேண்டுகோள் விடுகிறார். "ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன்" என்பதை விளக்கி பிரிவினை பாவம் என்று சொல்லாமல் சொல்லுகிறார். (எபே 4:3-7). அவர் வேண்டுகோளும் இன்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

**6. இறுதியாக சபையை விட்டே விலகினார்கள் :**

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் மனிதரையே கடித்த கதையாக, முதலில் விசுவாசத்தை விட்டுவிலகிய மனிதன் கொஞ்சம் கொஞ்சமாய் சுவிசேஷத்தை, சத்தியத்தை, கொள்கையை, ஐக்கியத்தை விட்டுவிலகி இறுதியாக சபையை விட்டே விலகினர். (அப் 20:27-30)

எபேசு பட்டணத்து மூப்பர்கள் தங்களையும், தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த மந்தையாகிய சபையையும் கண்காணிக்கும் படி எச்சரிக்கப்படுகின்றனர். இந்த மந்தை கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது. என்று கூறப்பட்டுள்ளது. (வ. 28) இந்த மூப்பர்கள் எபேசுப் பட்டணத்தில் இருந்த சபையை, மேய்ப்பர்கள் மந்தையைக் காப்பதுபோல் காக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். ஏனெனில் "மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் உங்களில் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்." (வ 28, 30) எச்சரித்திருந்தார். எப்படி ஓநாய்களால் மந்தை சிதறடிக்கப்படுமோ அவ்வாறு கள்ளப் போதகர்களால் சபையும் சிதறடிக்கப்படும். இந்த சண்டாளர்கள் கிறிஸ்து தம் விலை மதியாத இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த சபையை சின்னாபின்னப்படுத்தி கிறிஸ்துவின் சபையைக் கூறுபோட்டு மகிழ்ந்தனர்.

தூர்போன மண்சட்டி நாளுக்கு நாள் மேலும், மேலும் விரிசல் அடைவது போல் அன்று விதைக்கப்பட்ட பிரிவினை வாதம் என்ற நச்சுச்செடி, பிரிவினை மார்க்கங்களாக வளர்ந்து பெருகி இன்றைக்கு எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு உண்மைக் கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்து மறைத்துக் கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாத தற்காலத்துக் கிறிஸ்தவர்கள் இந்த பிரிவினை மார்க்கங்களையும், குழுமங்களையும் கிறிஸ்துவின் சபைகள் என்று நினைத்துக் கொண்டிருக் கின்றனர். இது குருடர்கள் யானையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த கதையைத் தான் நினைவூட்டுகிறது ஆனால் சபை வரலாற்றைப் படிக்கும் போது கிறிஸ்த வத்தில் இன்று நிலவும் பிரிவினைகளால் உண்மைக் கிறிஸ்தவத்துக்கு ஏற் பட்டிருக்கின்ற தலைக்குனிவை அறிந்து வேதனைப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன?

1. யூதா நிருபம் மூன்றாம் வசனம் கூறுகிற வண்ணம் பரிசுத்த வான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாம் தைரியமாகப் போராட வேண்டும். அந்த ஒரே விசுவாசம் மீட்கப்பட்டு, விலகிப் போனதற்கு முன்பு இருந்த நிலைமைக்கு கொண்டு வரப்படவேண்டும்.
2. தடம்புரண்டு கிடக்கிற கிறிஸ்தவ மார்க்கம் சீர்ப்படுத்தப்பட வேண்டும்.
3. மாந்த ஞானத்தால் கறைபடாத சத்தியம் போதிக்கப்பட வேண்டும்.
4. கள்ளப் போதகங்களின் ஊற்றுக் கண்கள் அடைக்கப்பட வேண்டும்.
5. ஆரோக்கியமான உபதேசங்கள் பறை சாற்றப்பட வேண்டும்.

6. பிரிவினையைத் தகர்த்து ஐக்கியத்தை (Unity Not Union) உருவாக்க வேண்டும்.

7. அப்போஸ்தலர்களினால் உபதேசிக்கப்பட்டு ஆதியில் நிறுவப்பட்ட ஒரே சபையை மீட்டு அமைக்க வேண்டும்.

சுருக்கிக் கூறின் முதலாம் நூற்றாண்டில் இருந்த தூய புதிய ஏற்பாட்டுச்சபை மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய, நம்முடைய பிதாவும் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஒன்றாயிருந்து, வேதம் விளம்புவதை விவரித்துக் கூறுவோம். வேதம் விளம்பாதவைகளுக்கு உடன்படவே மாட்டோம் என்று சூளுரைத்துச் செயல்பட வேண்டும். தயாரா?

**E.Z.** செல்வநாயகம்

*"திருமறை ஆசான்" மாத இதழின் நிறுவன ஆசிரியரும் ஈரோடு கிறிஸ்துவின் சபை ஊழியருமான சகோ. E.Z. செல்வநாயகம் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து 9.2.97- உடன் நான்கு ஆண்டுகள் நிறைவு பெறுவதால் அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.*

– ஆசிரியர்.

# தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வேதாகமம்

வேதாகமம், உலகம் ஒரு போதும் அறிந்திராத மிக வியப்பும், அதிசயமும் நிறைந்த ஒரு புத்தகம். கோடிக்கணக்கில் எழுதப்பட்டுள்ள அனைத்துப் புத்தகங்களிலும், வேதாகமம் தனித்தன்மையுடனும் விளங்குகிறது. 1600 ஆண்டு காலமாக 40 மனிதர்கள் இதை எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர். கிழக்கே பாபிலோனிலிருந்து மேற்கே ரோமாபுரி வரையிலும் ஐந்து மாறுபட்ட நாகரீகமுள்ள மக்கள் இதை எழுதியிருக்கின்றனர். அரசர்கள், தீர்க்க தரிசிகள், ஆசாரியர்கள், அதிகாரிகள், செம்படவர்கள், ஆயர்கள், படைத்தலைவர்கள், வைத்தியர்கள், சிறைக் கைதிகள், கவிஞர்கள், சில படித்தவர்கள் மற்றும் சில படிக்காதவர்கள் ஆக வாழ்வின் வித்தியாசமான பல நிலைகளிலுமிருந்து வந்த எழுத்தர்கள் இதின் பக்கங்களை எழுதியிருக்கின்றனர். என்ற போதிலும், 31,102 வசனங்களை, 66 புத்தகங்களுக்குள் அடக்கியுள்ள வேதாகமம், ஒரே ஒரு முக்கியமான மையக்கருத்தைக் கொண்டுள்ளது. மனுக்குலத்தின் இரட்சிப்பின் பேரில் தேவனுக்குள்ள விருப்பத்தையும், அன்பையும் அது வெளிப்படுத்துகிறது.

இந்தக் குறிப்பிடத்தக்க உண்மைகளைப் பற்றி நாம் என்ன சொல்ல விருக்கிறோம்? வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. (2 தீமோ.3:16), "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது." "அருளப்பட்டிருக்கிறது" என்ற வார்த்தைக்கு "ஏவப்பட்டிருக்கிறது" என்று பொருள். அதாவது ஒரு வெளி சக்தியின் தூண்டுதல், இயற்கையின் வல்லமைக்குப் புறம்பாக செயல்படுதல் என்பதாகும். இப்படியாக, பழைய ஏற்பாட்டில் "கர்த்தர் இப்படிச் சொன்னார்" என்பதாக 2500 இடங்களில் நமக்கு நினைப்பூட்டுகிறது. மனிதன் மூலமாக தேவன் மனிதனிடம் பேசுவதே வேதாகமம்.

தேவ ஆவியினால் வேதாகமம் எழுதப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் :

வேதாகமம் அழியாததாக இருக்கிறது; நாத்திகர்கள், புற சமயத்தார், உலக அரசுகள், ஊழலில் ஊறிப் போன மதங்கள், ஆகிய அனைவரின் கூட்டு எதிர்ப்புகளையெல்லாம் முறியடித்து அது தலை நிமிர்ந்து நின்று கொண்டிருக்கிறது. தவறாக வழி நடத்தப்பட்ட விஞ்ஞானிகள், படித்த

மேதாவிகளான விரோதிகள் அதை தாக்கியிருக்கின்றனர். என்ற போதிலும் தாக்கியவர்கள் தகர்ந்து போனார்களே தவிர, வேதாகமம் எவ்வித சேதமும் இன்றி இன்றும் உறுதியோடு நிற்கிறது.

வேதாகமம் மனித ஞானத்திற்கு எட்டாதது. இந்த பரிசுத்த புத்தகத்தை, தங்கள் வாழ் நாட்களையெல்லாம் செலவிட்டு உலகின் அறிஞர்கள் பலர் கற்றுக் கொள்ள முயன்ற போதிலும், ஆரம்பத்தில் எப்படியிருந்ததோ அதே போன்று, ஆழங்கான இயலாத நிலையிலேயே அது இருந்திருக்கிறது. குறைந்த மனம் படைத்த மனிதனால் நிறைவான ஒரு தயாரிப்பை மேற் கொள்ள இயலாது.

வேதாகமம் எழுதப்பட்டிருக்கிற நடைமுறை வழக்கத்திற்கு மாறாக இருப்பது, அதன் தெய்வீகத் தன்மையைக் காட்டுகிறது. சுருக்கமாக செய்திகள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சிருஷ்டிப்பின் சரித்திரத்தையும், 2500 ஆண்டுகால நாகரிகத்தின் சரித்திரத்தையும் ஆதியாகம புத்தகம் சொல்லுகிறது. பதிவு செய்யப்பட்டவைகளில் தவிர்க்கபட்டவைகள் தேவ ஆவியின் ஏவுதலுக்குச் சான்று பகருகின்றன. தனது கதாநாயகனின் ஆரம்பகால வாழ்வைப் பற்றி எந்த மனித எழுத்தாளர் குறிப்பிடாமல் விட்டு விடுவார்? என்ற போதிலும், நற்செய்தின் நான்கு எழுத்தர்களும் அவ்வாறு செய்திருக்கின்றனர். பேதுரு, பவுல் ஆகியோரின் பணிகளைப் பற்றிக் கூறும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மற்ற அப்போஸ்தலர்களின் பணி பற்றி எதுவும் கூறவில்லை. மனிதர்கள் இந்த மாதிரியாக புத்தகங்களை எழுதுவதில்லை. எழுத்தின் பாரபட்சமற்ற தன்மை வித்தியாசமாக அமைந்திருக்கிறது. பத்சேபாளுடன் தாவீது செய்த பாவம், கிறிஸ்துவை மறுதலித்த பேதுரு இன்னும் இதுபோன்ற பதிவு செய்யப்பட்டுள்ள பல காரியங்கள் எல்லாம், சாதாரண எழுத்தாளர்கள் கையாளாத முறையில் வேதாகமம் எழுதப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

தேவ ஆவியால் ஏவப்பட்ட ஒரு எழுத்தாளரால் மட்டுமே நிறைவேறிய தீர்க்கதரிசனங்களைப் பற்றி எழுத முடியும். தொல் பொருள் கண்டு பிடிப்புகள் எல்லாம் சரித்திரம், புவியியல், பழங்கால மக்கள் பற்றிய வேதாகமக் கூற்றுகளோடு ஒத்துப் போகின்றன.

மனுக்குலத்தின் பேரில் வேதாகமத்தின் தாக்கம் (நன்மையான காரியத்தில்), எழுதப்பட்டுள்ள வேறு சகல புத்தகங்களிலிருந்தும், அதை வேறுபடுத்திக் காட்டுகிறது. வேதாகமம் எங்கெல்லாம் பரவி, படிக்கப்பட்டு, விசுவாசிக்கப்பட்டு வந்துள்ளதோ அங்கெல்லாம் நாகரீகம் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதோடு,

தனிப்பட்ட சுதந்திரமும் முழுதுமாக உணரப்பட்டுள்ளது. எங்கு வேதாகமம் இல்லையோ அங்கு கொடுங்கோலாட்சி, அடிமைத்தனம், அறியாமை, எல்லாம் ஆளுகின்றன.

வேதாகமத்தை பரிவுடனும், அக்கரையுடனும் படிக்க நேரத்தை ஒதுக்குங்கள். இப்புத்தகத்தின் தேவ ஆவியின் ஏவுதலின் நிரூபணத்தை நீங்கள் உணர மூடியும். ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படுத்தும் ஆழமான அதின் செல்வாக்கும், மாற்றங்களும் அது வெறும் மனிதனால் எழுதப்பட்டதல்ல என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. எந்த நூற்றாண்டாயிருப்பினும், எந்த நாட்டைச் சார்ந்தவராயினும், வேதாகமத்தை படிப்பவரில் எழுச்சிமிக்க ஒரு செல்வாக்கை அது ஏற்படுத்துகிறது. வேதாகமம் தேவன் நமக்கு அளித்திடும் செய்தி.

வேதாகமத்தைப் பற்றிய உங்கள் ஞானம் எந்நிலையில் உள்ளது? நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் ஏன் இங்கு இருக்கிறேன்? நான் எங்கே செல்லப் போகிறேன்? – என உங்கள் ஆத்துமா அறிந்து கொள்ள ஆவலாக இருக்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க உங்களால் கூடுமா? வேதாகமம் மட்டுமே இக்கேள்விகளுக்குத் தெளிவான திருப்தியான பதில்களை அளிக்கக் கூடும்; அளிக்கிறது.

J.C. சோட்

## லூக்கா புத்தகத்தின் ஆசிரியர்

1. *பெயர் : லூக்கா*
2. *இவர் மருத்துவராக பணியாற்றியிருக்கிறார்.*
3. *இவர் புதிய ஏற்பாட்டில் இரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார்.*

   *லூக்கா - அப்போஸ்தலர் நடபடிகள்*
4. *யூதரல்லாத புறஜாதியைச் சேர்ந்த புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர் இவர் ஒருவரே.*
5. *பவுலுடைய இரண்டு வருட சிறையிருப்பின் காலத்தில் பவுலோடு கூட இருந்திருக்கிறார்.*
6. *லூக்கா, பவுலோடு கூட இருந்து அப்போஸ்தலருடைய வாழ்க்கையையும் அறிந்திருந்தார்.*
7. *லூக்கா எழுதின புத்தகங்களின் எழுத்து நடைகள் தான் ஒரு கல்வி மான் என்பதை எடுத்து காட்டுகின்றன.*

## பெண்கள் பகுதி

# நானும் என் வீட்டாருமோ வென்றால்...

இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை மறந்து தன் தன் மனம் போன போக்கில் போய்க் கொண்டிருந்த சூழ்நிலையில் யோசுவா தன்னுடைய குடும்பத்தாரின் விசுவாச உறுதிக்கு உத்திரவாதம் அளித்து "நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்" என்றான். (யோ. 24:75) நோவா கூட உலகமெல்லாம் தன் செயல்முறைகளை இகழ்ந்தும் பழித்தும் கூறியும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தன் குடும்பத்தாரை விசுவாசத்திலிருந்து வழுவி போகா வண்ணம் காத்துக் கொண்டான். (1 பேது 3:20, 2 பேது 2:5) ஆனால் தற்காலத்தில் குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ளாமல் ஆண்கள் மட்டும் வந்து போவது கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் தவறான பழக்க வழக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. அதுவும் ஆராதனைக் கூடங்கள் சற்றது தூரமாக இருந்து விட்டால் அதையே ஒரு காரணமாக்கி விடுவர். போதிய பஸ் வசதி இல்லை குழந்தைகளை இழுத்துக் கொண்டு போக்குவரத்து நெரிசலில் அவைகளை ஏற்றி இறக்கி கொண்டு வந்து சேர்வதற்குள் பெரும் பாடாய்ப் போய்விடுகிறது. - அப்படித்தான் அவர்களைக் கொண்டு வந்து சேர்த்தாலும் என்ன, அவர்களுக்கு பிரசங்கங்களுக்கு இதர சபை நடவடிக்கைகளும் விளங்கவா போகிறது? - ஆகவேதான் அவர் மட்டும் வந்து விட்டு வரட்டும். பிள்ளைகள் பெரிதான பிறகு நாங்கள் வருகிறோம் என்று தாய்மார்களும் தப்பித்துக் கொள்கின்றனர்.

இந்த மாதிரிய பழக்கத்தில் ஏற்படும் விளைவுகள் என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் 91) ஆண்கள் மட்டும் போய் ஆராதித்து வருவதினால் முழுக் குடும்பம் கிறிஸ்துவுக்குள் வளர முடியுமா? (2) பிள்ளைகளுடைய வேத அறிவு வளர்ச்சியடையுமா? (3) அவர்கள் சபை நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாமல் அவர்களுடைய விசுவாசம் உறுதியாக இருக்குமா? (4) அங்கே ஆராதனைக்காக கூடிவரும் மற்ற சகோதர சகோதரிகளை மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் பார்க்காமலே இருந்தால் அவர்கள் மீது இவர்களுக்கு அன்பு சுரக்குமா? (5) ஒற்றுமை உணர்வு உருவாகுமா? (6) சிறு பிள்ளைகளுக்கான ஞாயிறு பள்ளி ஒழுங்காக நடந்து அவர்கள் வேத அறிவைப் பெற்றுக் கொள்ள முடியுமா? (7) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? சிறு பிள்ளைகளாக இருக்கும் பொழுது அவர்களுக்கு நற்பழக்கங்களையும், கர்த்தருக்கு பயப்படும் பயத்தையும் கற்றுத் தராமல் போனால் வளர்ந்து, ஆள் ஆகும் போது அவர்களை நல்வழிப்படுத்துவது சிரமம் அல்லவா?

சகோதரிகளே! கணவன் மாத்திரம் ஆராதனையில் கலந்து கொண்டு நாமும்; குழந்தைகளும், வீட்டிலேயே இருந்து விட்டால் நாம் விசுவாசத்தை விட்டு வழுவி விழுந்து போக மாட்டோமா? இந்தத் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில்

உறுதியாக இருந்தால் அல்லவா, நமக்கு பின் வருகிற பிற்காலச் சந்ததிகள் விசுவாசத்தில் வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும்? நாம் நம்முடைய குழந்தைகள் விசுவாசத்தில் வளர்வதற்கேற்ற சூழலை அமைத்துத்தரா விட்டால் அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமாகி விடுவார்களே! இந்த அபாயங்களை நாம் உணர்ந்து அவர்கள் விசுவாச ஜீவியத்தில் வளர்வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

பெண்களுக்கும் ஆத்துமா உண்டு. ஆகவே அவர்களும் தேவனைத் தொழுவது அவசியம். ஆசீர்வாதத்தை பார்சலில் அனுப்ப முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் வழி நடத்தப்படவும், உற்சாகப்படுத்தப்படவும் வேண்டும். அவர்கள் சபையில் உள்ள மற்ற சகோதரிகளை நேசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளமுடியும். சபையால் நடத்தப்படும் பல்வேறு செயல் திட்டங்களில் தன்னையும் இணைத்துக் கொண்டு, ஆவிக்குரிய வளர்ச்சி பெற்று தேவனுக்குப் பிரியமாய் நடக்க வேண்டும்.

ஒருவேலை பெரியவர்களைப் போல குழந்தைகள் சொல்லப்படுகிற காரியங்களைத் தெளிவாக புரிந்து கொள்ளாமல் போகலாம். அதற்காகத் தானே ஞாயிறு பள்ளி, அதில் அவர்களுடைய வயதுக்கும், மனப்பக்குவத்துக்கும் ஏற்ற முறையில் தேவனுடைய வார்த்தைகளைக் கற்பிக்கலாமே! அதனால் தான் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை ஒவ்வொரு கூட்டத்திற்கும் அழைத்துக் கொண்டு வரவேண்டும். என்று வலியுறுத்துகிறோம். அப்படிச் செய்தால் அவர்கள் நன்கு பயிற்சி பெற்று கர்த்தருடைய வசன அறிவில் வளர்ச்சியடைவார்கள். பெண்களும், குழந்தைகளும் பொதுவாக ஆராதனைக் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருவதோடு மட்டுமல்லாது, வீட்டிலேயும் பிள்ளைகளுக்கு காலை, மாலை ஜெபங்கள் வேதபாடப் பயிற்சி ஆகியவைகளை ஒழுங்காகக் கற்றுத் தரவேண்டும். ஏனெனில் வாரத்தில் ஒருநாள் இரண்டொரு மணி நேரம் ஆராதனையில் நாம் கற்றுக்கொள்கிற கொஞ்ச காரியம் வாரம் ஏழு நாட்கள் முழுவதுக்கும் போதாது. எனவே வீட்டிலும் நாள்தோறும் சிறிது நேரத்தை ஒதுக்கி குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய விசுவாச ஜீவன் பலப்படும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சிறார்களுக்கு நித்திய ஜீவனை அடைவதற்கான காரியங்களில் பயிற்சி கொடுக்கத் தவறிவிட்டு, சொற்ப காலத்தில் அழிந்துபோகிற சரீரப் பிரகாரமான நன்மைகளைத் தரும் உயர்ந்த கல்வி, சேர்த்து வைக்கும் சொத்து கட்டி வைக்கும் பங்களாக்கள், தூசும், குப்பையும் தான். அவைகள் அவர்களுக்கு சிறப்பையும், ஆசீர்வாதத்தையும் சமாதானத்தையும் பெற்றுத் தராது." ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" என்றும் (லூக் 12:15) ஒருவன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? (மத் 16:26) என்றும் திருமறை கூறும் பேருண்மைகளைச் சிந்தித்து பார்ப்பீர்.

ரேச்சல் நாயகம்

# நீ ஏன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறாய்?

பல ஆண்டுகளாக ஊழியஞ் செய்து கொண்டிருக்கும் என்னிடம் பலர் பலவேளைகளில் கேட்கும் ஒரு கேள்வி : "நீ ஏன் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறாய்?" தேவனையும் வேதாகமத்தையும் நேசிக்க என் பெற்றோர்களும், தாத்தா, பாட்டியும் எனக்குக் கற்றுக் கொடுத்திருந்தனர் என்பது என் முதல் எண்ணம் என்ற போதிலும், இந்தப் பதிலை அவர்கள் தேடிக் கொண்டிருக்கவில்லை. இப்படியாக, நான் பல ஆண்டுகளுக்கு முன்பாக கொஞ்சம் ஆராய்ச்சி செய்து, கீழ்க்கண்ட காரணங்களைக் கண்டு பிடித்தேன்.

1. நான் ஒரு கிறிஸ்தவன், ஏனென்றால் தேவனை நேசிக்க நான் கற்றுக் கொடுக்கப்பட்டேன். தேவனில் விசுவாசமுள்ளவனாக நான் இருக்கிறேன். தேவன் என்னை நேசித்தபடியால் (யோவான் 3:16) அவருடைய ஒரே குமாரனை எனக்காகத் தந்தார். இந்த குமாரன் என் பாவங்களின் மன்னிப்புக்கென்று தமது இரத்தத்தை சிந்தியபடியால், நான் அவரை நேசிக்கிறேன். ஏனென்றால் முதலில் அவர் என்னை நேசித்தார் (1 யோவான் 4:19).

2. நான் ஒரு கிறிஸ்தவன், ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் பேரிலுள்ள என் விசுவாசமானது, அவர் கூறுவதைச் செய்ய எனக்குச் சொல்லுகிறது. இதே விசுவாசம் தான், நான் திருமுழுக்குப் பெற்று அவருடைய சபையில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்படவும் என்ன வழிநடத்துகிறது. (மாற்கு 16:15–16 அப். 2:47).

3. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால் “"”எல்லாரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி" என வேதாகமம் எனக்குச் சொல்லுகிறது. (ரோமர் 3:23; 1 யோவான் 1:10). நான் பாவத்தில் நீடிக்க விரும்பவில்லை; எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் இந்த மகத்தான இரட்சிப்பை அலட்சியப்படுத்தினால் (எபிரேயர் 2:4) நித்திய தண்டனையிலிருந்து தப்பிக்க வழி எதுவும் இருக்காது.

4. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால், அது என்னை ஒரு நல்ல மனிதனாக்குகிறது. உலகத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் அது என்னை ஒதுக்கி வைக்கிறது. (ரோமர் 1:11; யாக். 1:21; யோவான் 6:44–45) தேவனுடைய இராஜ்யத்தைத் தேடு என கிறிஸ்து எனக்குச் சொல்லுகிறார். நான் அவருடைய பாதுகாப்பில் இருப்பேன். (மத். 6:33; கலா. 6:7–10; மத். 13:23; மாற்கு 10:29–30).

5. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனெனில் நான் அவருடைய பிள்ளையாக இருக்க தேவன் விரும்புகிறார். ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்பி அவருடைய பிள்ளைகளாக இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறார். (2 பேதுரு 3:9)

6. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால் அவருடைய வார்த்தை வழியாக கிறிஸ்து எனக்கு உறுதி அளிக்கிறார். (எபி. 10:22; ரோமர் 10:17;) நித்திய ஜீவன் எனக்காகக் காத்திருப்பதை நான் அறியக்கூடும்; ஏனெனில் கிறிஸ்துவின் இரத்தத்தால் நான் இரட்சிக்கப்பட்டேன். (1 யோவான் 1:7; 2:2). எனது கடந்த கால பாவங்களிலிருந்து என்னை இந்த இரத்தம் விடுவித்துள்ளது. (எபே. 1:7) கிறிஸ்துவோடு நடந்து அவருடைய கட்டளைகளுக்கு நான் கீழ்ப்படியும் போது, எதிர்காலத்திலும் தொடர்ந்து அது என்னை விடுவிக்கும். (1 யோ. 2:3) கிறிஸ்துவுக்குள் நான் திருமுழுக்குப் பெற்றதால், நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என நான் அறிவேன். (கலா. 3:26–27; ரோமர் 6:3–4) நான் “”’அறிவதற்கு” எந்த காட்சியையோ அல்லது உணர்வையோ சார்ந்திருக்கத் தேவையில்லை. (எபி. 11:1; யோவான் 20:30–31; 2 தெ. 1:10; II கொரி. 5:6;).

நான் அறிய முடியும் என்பதை உறுதிப்படுத்துகிற விதமாக, 1 யோவான் புத்தகத்தில் 24 தடவைகள் “”’தெரியும்” என்ற வார்த்தையை யோவான் பயன்படுத்துகிறார். பெந்தெகொஸ்தே நாளிலே, பேதுரு எழுந்து நின்று: “”’....இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.” (அப். 2:36). “”’...நான் விசுவாசித்திருக்கிறார் இன்னார் என்று அறிவேன்...” என பவுல் எழுதினார். (2 தீமோத் தேயு 1:12) இந்த மனிதர்கள் அவர் இருப்பதற்கான ஆதாரங்களைக் கண்டனர். இன்று அற்புதங்கள் எதுவும் நடைபெறவில்லையென்றாலும், அவர்களுடைய சாட்சியங்களின் அடிப்படையில், அவர்கள் எப்படி அறிந்தார்களோ அப்படி நாமும் அறிய முடியும் என வேதாகமம் கூறுகிறது. (யோவான் 20:30–31).

7. நான் ஒரு கிறிஸ்தவன்; ஏனென்றால் இந்த உறுதி எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் கனி உண்மையான மகிழ்ச்சியாகும். (1 பேதுரு 1:8) சிலுவையால் உண்டான தேவனுடைய சமாதானம் எனக்குண்டு. (கொலோ 1:20) சங்கீதம் 103:11–12 வசனங்களை விட இனிமையான ஒரு வசனத்தைக் காண இயலாது. படித்துப் பாருங்கள் : “பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள் மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரியதாயிருக்கிறது. மேற்குக்கும்

கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்."

8. அநேக காரணங்களுக்காக நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேன். என்ற போதிலும், அவை எல்லாவற்றையும் விட நான் பரலோக ராஜ்யத்திற்குச் சென்று, என் கர்த்தரோடு வாழ விரும்புகிறேன் என்பது சிறப்பான காரணம். ""கர்த்தர் என் பெலனும் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களி கூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்" (சங்கீதம் 28:7).

**Peggy T. Crump** **EZSR**

# கிறிஸ்துவின் சபை

*கிறிஸ்துவின் சபை : இச்சபையைப் பற்றி பரிசுத்த வேதாகமம் மிகத் தெளிவாக விளக்குகிறது. இது தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு, முன்னுரைக்கப்பட்டு கி.பி. 33ம் ஆண்டில் எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. மீகா - 4:1-2, சகரி 6 : 12. I கொரி 3 : 16 மத் 16 : 18, ரோமர் 16 : 16.*

*கிறிஸ்துவின் சபை :- இதற்கு கிறிஸ்து மட்டுமே தலைவராக இருக்கிறார். எபே 1: 21 - 23, 5 :23, கொலோ 1 : 18.*

*கிறிஸ்துவின் சபை : இச்சபைக்கு பரிசுத்த வேதாகமத்தை தவிரவேறே கொள்கை புத்தகங்கள் (Creed Books) கிடையாது. வேதத்தில் சொல்லப்பட்டவைகளைக் குறித்து பேசி, மறைக்கப்பட்டவைகளைக் குறித்து மவுனமாய் இருக்கவே இந்த சபை விரும்புகிறது I கொரி 4 : 6. I பேதுரு 4 : 11. உபா29:29.*

*கிறிஸ்துவின் சபை : இது அப்போஸ்தலரால் அன்று போதிக்கப்பட்ட அதே சுவிசேஷத்தையும் இரட்சிப்பின் வழியையும் சற்றும் மாற்றாமல் இன்றும் அறிவித்து வருகிறது. ரோமர் 1 : 16, I கொரி 15 : 1 - 4.*

# எல்லாவற்றையும் அறியும் தேவன்

சர்வ வல்லமை, அன்பு, கருணை, நீதி இன்னும் இவை போன்ற எண்ணற்ற சிறப்புத்தன்மைகளை உடையவராக இருக்கும் நமது தேவன், சகலவற்றையும் அறியும் தேவனாகவும் இருக்கிறார். அதாவது, குறையற்ற அல்லது முழுமையான ஞானமுடையவராக அவர் இருக்கிறார். நம் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அவர் அறிகிறார். நமது சரீர, ஆத்ம தேவைகள் அனைத்தையும் அவர் தந்தருளியிருக்கிறார். நமக்கு எது சிறந்தது என்பதை அவர் அறியக்கூடியவராக இருக்கிறார். இவ்வுண்மையை ஒத்துக் கொள்ள வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டு புத்தகத்தில், யோசேப்புவின் சரித்திரத்தை நாம் படிக்கிறோம். அவனது சகோதரர்கள் அவனைப் பகைத்தனர். அவனை கொலை செய்யக்கூட விரும்பினர். பின்னர், எகிப்து நாட்டுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு வியாபாரக் குழுவிடம் அவனை விற்றுப் போட்டனர். ஆண்டுகள் பல உருண்டோடின. பெரும் பஞ்சம் நாட்டில் தலைவிரித்தாடிற்று. எகிப்திலே உணவுப் பண்டங்கள் இருப்பு வைக்கப்பட்டிருப் பதாகக் கேள்விப்பட்ட கானான் தேசத்தானாகிய, யோசேப்பின் தந்தை தனது மகன்களை உணவு தானியங்கள் வாங்கிவர எகிப்துக்கு அனுப்பினான். அவர்கள் எகிப்து நாட்டுக்கு வந்த போது, தங்களுடைய எந்த சகோதரன் யோசேப்பை அழித்துப் போடவேண்டுமென்று இருந்தார்களோ, அதே யோசேப்பிடம் வியாபாரம் செய்ய வேண்டியதிருக்கும் என கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. தேவனின் மகத்தான கிருபையால், அந்நாட்டின் ஆளுநராகவும், உணவுப் பொருட்களை விநியோகிக்கும் பொறுப்புடைய வராகவும் யோசேப்பு இருந்தான். எனவே, உணவு தானியங்களுக்காக அவனை அவர்கள் அணுகிய போது, தனது சகோதரர்களை உடனடியாக அவன் அடையாளங் கண்டு கொண்டான். ஆனால் யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் அடையாளம் காணவில்லை. ஏனெனில், பல ஆண்டுகளுக்கு முன்பே அவனை விற்றுப்போட்ட போது யோசேப்பு மிகச் சிறுவனாக இருந்தான். இப்போதோ அவன் மாறுபட்ட ஆடைகளை அணிந்து, எகிப்து மொழியைக்கூட பேசுகிறவனாக இருந்தான். யோசேப்பு தன்னுடைய சகோதரர்கள் பேரில் அன்பு கொண்டு அவர்களுக்குத் தேவையானவைகளைக் கொடுத்தான். மேலும் தேவைப்படும் உணவுப் பொருட்களைப் பெற்றுச் செல்ல,

அவர்களை மீண்டுமாக எகிப்துக்கு வரச் சொன்னான். அவ்வாறாக அவர்கள் மறுமுறை அதிக உணவுப் பொருட்களைப் பெற்றுச் செல்ல அங்கு வந்த வேளையில், அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கியது யோசேப்புதான் என அவர்கள் அறிந்து கொண்டபோது உயிர் போயிற்று. யோசேப்பு தங்களை இப்போது என்ன செய்யப் போகிறானோ என பயத்தால் உறைந்து போனார்கள். என்றாலும், யோசேப்பு அவர்களிடம் வித்தியாசமாக நடந்து கொண்டான் என்று வேதாகமம் கூறுகிறது: என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சனை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். தேசத்தில் இப்பொழுது இரண்டு வருடமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருடம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆகவே நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னை பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாகவும் வைத்தார். நீங்கள் சீக்கிரமாய் என் தகப்பனிடத்தில் போய்: தேவன் என்னை எகிப்து தேசம் முழுவதுக்கும் அதிபதியாக வைத்தார்; என்னிடத்தில் வாரும், தாமதிக்க வேண்டாம்" எனச் சொல்லும்படி கூறினான். (ஆதியாகமம் 45:5–9).

கவனியுங்கள் : தேவனுடைய கரம் தனது வாழ்வில் இருந்ததை யோசேப்பு கண்டான். “"...நீங்கள் அல்ல, .... தேவன்" என்றான். பஞ்சம் வருவதற்கு முன்னரே தேவன் அதைப்பற்றி அறிந்திருந்தார். அவர்களுக்கு உணவு தானியங்களின் தேவையையும் தேவன் அறிந்திருந்தார்; யோசேப்பு தேவனை நம்பினான்; அவனுடைய வாழ்வின் ஒவ்வொரு காரியத்திற்கும் தேவனுக்கு மகிமை செலுத்தினான்; தேவனுடைய கரத்தில் அவனுடைய வாழ்வை ஒப்புக் கொடுத்தான்; அவருடைய விருப்பப்படியே நடக்க அவன் முயன்றான், தனது வாழ்வின் சகல காரியங்களிலும் அவருக்கு மதிப்பும் மகிமையும் அளித்தான். தேவனானவர் சகலவற்றையும் அறியக்கூடிய தேவன் என்ற உண்மையை அவன் ஒப்புக்க கொண்டான் அவர் தமது கிருஷ்டிகர்; நமது பரலோகத் தந்தை; நமது தேவைகளை அவர் அறிவார். தேவை தோன்றும் முன்பேகூட, அதை நாம் சந்திப்பதற்கான வழிகளை உண்டாக்குகிறார்.

நமது தேவைகள் தோன்றுமுன்பே கூட, நமது தேவைகளை அறியவும், அவைகளுக்கு வேண்டியவைகளைத் தரவும் கூடிய சகலவற்றையும் அறியும் ஒரு மகத்தான தேவனை நாம் அடையப் பெற்றிருக்கிறோம், என்பதை அறிய எவ்வளவு அருமையாக இருக்கிறது 1 பேதுரு 1:18–20 வசனங்களில் அப்போஸ்தலர் பேதுரு எழுதினர்: "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள் என்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசி காலங்களில் வெளிப்பட்டார்." அதாவது, மனுக்குலம் உண்டாக்கப்படுவதற்கு முன்னரேகூட, நாம் தோன்றுவதற்கு முன்பேகூட, ஆம்! உலகம் உண்டாக்கப்படும் முன்பே மனித இரட்சிப்பின் தேவையை அறிந்த தேவன், சகலவற்றையும் அறியும் சிருஷ்டி கர்த்தர், கிறிஸ்து என்னும் ஆட்டுக்குட்டியை உலகத்தின் பாவங்களின் பலியாக முன்கூட்டியே தீர்மானித்திருந்தார். ஏனெனில் உலக பாவங்களுக்காக கல்வாரி சிலுவையில் சிந்தப்பட்ட அவருடைய இரத்தத்திற்காக அவரை முன்னரே தேர்ந்தெடுத்திருந்தார். (1 யோவான் 4:10; யோவான் 3:16). வேறு விதமாகச் சொன்னால், எதிர்காலத்தில் அறிவிக்கப்படவேண்டிய காரியம், சகலவற்றையும் அறியும் தேவனுடைய மனதிலே ஏற்கனவே இடம் பெற்றிருந்தது! ஆனால், இந்த உண்மையை நாம் ஒப்புக் கொண்டு விசுவாசத்தோடு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பாவத்தின் விளைவான நித்திய நரகத் தண்டனையிலிருந்து நன்மை, நமது தேவனைத் தவிர வேறு யாரால் இரட்சிக்க இயலும்?

**Sunny David** சன்னி டேவிட்

# உங்களுக்குத் தெரியுமா?

*அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயு மிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*

எபி 4 : 13

# "சபை தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டது"

பொதுவான ஒரு கருத்து என்னவென்றால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கவே இந்த பூமிக்கு வந்தார். ஆனால் யூதர்கள் அவரை புறக்கணிக்கவே, அவர் இராஜ்யத்திற்குப் பதிலாக சபையை (CHURCH) ஸ்தாபித்தார் என்று சொல்லுகிறார்கள். இந்த உபதேசத்தின் இன்னொரு கருத்து என்னவென்றால், இயேசு, இரண்டாம் வருகையின் போது தமது ராஜ்யத்தை இந்த பூமியில் ஸ்தாபிப்பார் இப்படிப்பட்ட கருத்துகளினால் சபையின் முக்கியத்துவம் சற்றுக் குறைவு பட்டு போய் கிறிஸ்துவின் பரமேலுதறுக்கும் அவருடைய வருகைக்குமிடையே இருக்கும் இடைவெளியில் என்ன சம்பவிக்கும் என்பதில் சில குழறுபடியான கருத்துக்கள் பரவலாக காணப்படுகிறது. தீர்க்கதரிசிகள் சபையை (CHURCH) பற்றி எதுவுமே சொல்லவில்லையென்ற பொதுவான நம்பிக்கை எங்கும் காணப்பட்டது. அவர்கள் இயேசுவின் முதலாம் வருகையை கண்டார்கள் அதன் பின்பு ஒரு பூமிக்குரிய ராஜ்யத்தை எதிர்பார்க்கின்றனர் இந்தப் பாடத்தில், நம்முடைய நோக்கம், புதிய ஏற்பாட்டு சபையானது தேவனால் திட்டமிடப்பட்டது, தீர்க்கதரிசிகளினால் தீர்க்க தரிசனமாக உரைக்கப்பட்டது அந்த தீர்க்க தரிசனங்கள் யாவும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் வந்த பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது என்பதை ஊறுதிப்படுத்துவதே.

"சபை தீர்க்க தரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டதா? நாம் ஒரு சரியான பதிலுக்கு வந்து சேருவதற்கு முன் வேதாகமத்தில் சொல்லப்படும் ராஜ்யமும் (Kingdom) தேவனுடைய வீடும் என்று பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளினால் சொல்லப்பட்டவை யாவும் புதிய ஏற்பாட்டின் சபையை (CHURCH) தான் குறிப்பிடுகிறது.

இயேசு, முன்னுரைத்தார் அவர் தமது சபையை கட்டப் போவதாக (மத் 16:18) அவர் சபையை "ராஜ்யம்" (Kingdom) (மத். 16:19) என்றழைக்கிறார். இதிலிருந்து சபையும், ராஜ்யமும் நோக்கத்தில் ஒன்றே என்று புரிகிறது. கிறிஸ்துவே சபைக்கும் ராஜ்யத்துக்கும் தலையாக இருக்கிறார். இதனுள் அனுமதிக்கப்பட கூடிய வரன்முறைகள் ஒன்றாகவே இருக்கிறது. யாரெல்லாம்

சபையிலிருக்கிறார்களோ அவர்கள் ராஜ்யத்திலும் இருக்கிறார்கள் பவுல் சொல்லுகிறார். "தேவனுடைய வீடு'' என்பது ஜீவனுள்ள தேவனுடைய சபையாயிருக்கிறது (I தீமோ 3:15) என்று இவைகளினால் நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம். ஆண்டவருடைய வீடு, ராஜ்யம், சபை இவை யாவும் ஒன்றைத்தான் குறிக்கிறது ஒரே கருத்தில் சொல்லப்படுகிறது.

இந்தக் கருத்துகளின் அடிப்படையில் நான் உங்களை 2 சாமுவேல் 7-ம் அதிகாரத்தை வாசித்து பார்க்கும்படியான ஒரு ஆலோசனையை தருகிறேன் இந்த அதிகாரத்தில் தாவீது ராஜாவாக இருக்கிறார். தேவனுக்கென்று ஒரு வீட்டை கட்ட தீர்மானிக்கின்றார். ஆனால் இதற்கு மாறாக தேவன் தாவீதை புறக்கணித்துவிட்டு தாவீதுக்கும் அவனுடைய ஜனத்துக்கும் ஒரு வீட்டை கட்டப் போவதாக வாக்குத்தத்தம் செய்கிறார். இந்தப் பணியானது தாவீதின் சந்ததியினால் தாவீதின் மரணத்துக்குப்பின் நிறைவேற்றி முடிக்கப் போவதாக சொன்னார். வீட்டைக் கட்டும் போது, அவருடைய சிங்காசனமும் உறுதிப்படுத்தப்படும் (2 சாமு 7:12, 16) இந்த தீர்க்கதரிசன வசனம் இயேசு கிறிஸ்துவோடு தொடர்புடையதாக இருக்கிறது அவரில் முழுமையாக நிறைவேறி முடிகிறது அவர் தாவீதின் குமாரன் என்றழைக்கப்படுகிறார். தாவீதின் சந்ததி (அப். 13:23)" நான் உனக்கு பிதாவாயிருப்பேன் நீ எனக்கு குமாரனாயிருப்பாய் என்ற வாக்குத்தத்தம் (எபி 1:5) கிறிஸ்துவுக்கு பொருந்தக் கூடியதாயிருக்கிறது. வீட்டை ஏற்படுத்துவதும், சிங்காசனம் உறுதிப்படுத்தப் படுவதும் என்றென்றுமாய் ராஜ்யம் இருப்பதும் (2 சாமு 7:13, 16) கிறிஸ்துவுக்கும் அவருடைய ராஜ்யத்துக்குமேயன்றி வேறொருவருக்கும் பொருந்தாது தாவீதின் பூமிக்குரிய வீடும் ராஜ்யமும் ஒரு முடிவு பெற்ற ஒன்றாகும். ஆனால் கிறிஸ்துவின் ராஜ்யம் மாத்திரமே என்றென்றுமாயிருக்கக் கூடியது பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு சொல்லுகிறார் உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப் பண்ணுவேன் என்று தேவன் தனக்கு சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால் (அப் 2:30) கிறிஸ்துவின் சிங்காசனத்தைப் பற்றி பெந்தெகொஸ்தே நாளில் அறிவிக்கப்படுகிறது. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தை பாருங்கள்.

முதல் தீர்க்கதரிசனமானது ஏசாயாவினால் பதிவு செய்யப்பட்டுள்ளது. "ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும் குறித்துக் கண்ட தரிசனம் கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள்

புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள் அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார் நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும் எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்'' (ஏசாயா 2:1, 3) இந்த வசனம் சபையானது பர்வதங்களுக்கு மேலாக ஸ்தாபிக்கப்படும் அல்லது எல்லா ராஜ்யங்களுக்கும் மேலாக உயர்த்தப்படும்.

**ஏசாயா மூன்று அடிப்படை உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார்.**

1. இந்த தீர்க்கதரிசனம், கடைசி நாட்களில் நிறைவேறும்.
2. எல்லா தேசத்தாரும் ஓடிவருவார்கள்.
3. எருசலேமில் அது துவங்கும்.

பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் ராஜா நெபுகாத் நேச்சார் கண்ட சொப்பனத்துக்கு விளக்கம் சொன்ன தானியேல் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்துவார். அது அழியாத ஒரு ராஜ்யம் அந்த ராஜ்யம் மற்றவர்களுக்கு விடப்படுவதில்லை. எல்லா ராஜ்யங்களையும் தகர்த்துவிட்டு அதுவே என்றென்றுமான ஒரு ராஜ்யமாக எழும்பும். (தானி 2:44)

யோவான் ஸ்நானகன் யூதேயாவின் வனாந்திரங்களில் "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது (மத் 3:1) என்று போதித்தார். அப்படியென்றால் யோவானுடைய நாட்களில் சபை வெளிப் படவில்லையென்று புரிகிறது. இந்த தீர்க்கதரிசனம், சபையை பற்றிய ஒரு தீர்க்கதரிசனம்.

பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று பிரசங்கித்த மற்றொருவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து (மத் 4:17) தம்முடைய சீஷர்கள் காணாமல் போன இஸ்ரவேல் வீட்டாரிடம் போதித்தனர் (மத் 10:5, 7) எழுபது சீஷர்களும் இதையே பிரசங்கித்தனர் (லூக் 10:1,9) ஒவ்வொரு வசனங்களும் ராஜ்யம் எதிர்காலத்தில் ஸ்தாபிக்கப்படும் என்பதையே வலியுறுத்துகின்றன.

மீண்டும் நாம் நினைவுபடுத்துவோம், இயேசு சொன்னதை அவர் தமது சபையை கட்டப்போவதாக சொன்னார் (மத் 16:18) அவர் தமது சபையை ராஜ்யம் என்றும் அழைக்கிறார் (மத் 16:19) ராஜ்யம் முன்னுரைக்கப்பட்டது. என்றால் சபையைப் பற்றியும் முன்னுரைக்கப்பட்டுள்ளது.

இயேசு இன்னொரு தீர்க்கதரிசனத்தை சொல்லியிருக்கிறார், "மெய்யாகவே நான் சொல்லுகிறேன் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் உங்களில் சிலர் மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று" (மாற்கு 9:1) இங்கே ஒரு சிலர் இயேசுவுக்கு முன்பு நின்று கொண்டிருக்கின்றனர் அவர்களில் சிலர் ராஜ்யத்தை காண்பதற்கு முன்பு மரிப்பதில்லையென்று இப்பொழுது நாம் கேட்போம் பலத்தோடே எது வரும் என்று முன்னுரைக்கப்பட்டது?

அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இயேசு தமது சீடர்களுக்கு சொன்னது. "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில், மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டும் (லூக் 24:45, 47) இதில் "சகலதேசத்தார்' என்றும் எருசலேம் சதுங்கி என்றும் முன்னுரைக்கப் பட்டுள்ளது. ஏசாயாவினால் உரைக்கப்பட்டதும் இப்பொழுது இவைகளை ஆராய்ந்து பார்ப்போம் இவைகள் யாவும் நிறைவேற வேண்டும் கடைசி நாட்களில் சம்பவிக்க வேண்டும்.

இயேசு பரமேறி போவதற்கு கொஞ்சம் முன்பு சீஷர்கள் ராஜ்யத்தை இந்த கால கட்டத்திலா திரும்ப தருவீர் என்று கேட்டார்கள் (அப் 1:6) இயேசு அவர்களை பார்த்து சொன்னது பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைவீர்கள். (அப் 1:7,8) ஆண்டவர் சொல்லுகிறார் பலத்தோடே பரிசுத்த ஆவியானவர் வருவார். பரிசுத்த ஆவியானவர் பலத்தோடே வந்தார். அந்தப் பொழுதே ராஜ்யம் துவங்கியது சபை ஸ்தாபிக்கப்பட்டது.

பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்தாவியானவர் வந்து அப்போஸ் தலர்களை நிரப்பினார். அவர்கள் ஆவியானவர் தந்தருளின வெவ்வேறு பாஷைகளை பேசினர் (அப் 2:1-4) அவர்கள் யாவரும் புது மதுபானம் பருகியுள்ளனர் என்று குற்றம் சாட்டப்பட்டனர் (அப் 2:13) பேதுரு இந்த குற்றசாட்டை மறுத்து ஜனங்கள் எவைகளை பார்க்கிறார்களோ கேட்கிறார் களோ இது யோவேல் தீர்க்கதரிசியினால் முன்னுரைக்கப்பட்டதே கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் (அப் 2:16,17) இங்கே கடைசி நாட்கள் என்பது. பெந்தேகொஸ்தே நாளில் நிறைவேறுகிறது. ஏசாயாவினால் சொல்லப்பட்ட மூன்று காரியங்களும் நிறைவேறுகிறது. கடைசி

நாட்களில் சம்பவிக்கும் சகல தேசத்தாரும் ஓடிவருவார்கள். இவையெல்லாம் எருசலேமில் துவங்கும்.

நீங்கள் நன்றாக நினைவில் வையுங்கள் இயேசு சொன்னதை. "ராஜ்யம் பலத்தோடே வரும்" பலமானது பரிசுத்தாவியோடு வரும் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தார் என்றால் நாம் ஒரு முடிவுக்கு வருகிறோம் ராஜ்யம் வந்தது சபை வந்து விட்டது என்று தீர்க்கதரிசன வசனத்தின்படி பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்கள் கேள்விபட்டு சுவிசேஷத்திற்கு கீழ்படிந்தனர். இரட்சிக்கப்படுபவர்களை கர்த்தர் தமது சபையில் சேர்த்து வந்தார் (அப் 2:47) பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு ஒருவராகிலும் சபையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. காரணம் சபை ஏற்படுத்தப்படவில்லை ஆகவே பெந்தெகொஸ்தே நாளில் சபை துவங்கியது.

சபையானது, தேவனுடைய நோக்கத்தின்படியும், திட்டத்தின்படியுமானது இந்த நோக்கம். ஒரு ரகசியம் அல்லது அநந்த ஞானம் பவுல் சொல்லுகிறார் "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புற ஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய ரகசியத்தை மறைத்து வைத்திருந்தார். காரணமென்ன? உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலம் தெரியவர வேண்டும். யூதர்களும் புறஜாதிகளும் ஒரே மாதிரியாக சபையில் ஒன்றாக இணைக்கப்படவேண்டும் இயேசு கிறிஸ்துவுக்குள் திட்டமிட்டபடியே (எபேசி 3 : 7 – 11)

சரித்திரப் பூர்வமான சபை அமைப்பானது பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமில் ஸ்தாபிதமானது அந்த நாளில் ஆவியானவர், அப்போஸ்தலர்கள் மீது ஊற்றப்பட்டு கிறிஸ்துவின் சரீரமான சபை ஏற்படுத்தப்பட்டது. பேதுரு அதன் துவக்கத்தை மேற்கோளிட்டு சொல்லுகிறார். (அப் 11:15,16) ஆரம்பம், பெந்தெகொஸ்தே நாளைக் காட்டுகிறது. "பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது அதை அடையாளமிட்டு வெளிப்படுத்துகிறது. "பெந்தெகொஸ்தே நாள்' சபையின் ஆவிக்குரிய உண்மையான சபையின் ஆரம்பத்தை மாத்திரம் சொல்லாமல், சபையின் தோற்றத்தின் நோக்கத்தையும் நமக்கு காட்டுகிறது.

தானியேல் துரைராஜ், திருச்சி.

# 3. பிரசங்கி, பிரசங்க வாக்கியத்தை எப்படி தெரிந்து கொள்வது?

ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளத் தட்டில் வைக்கப்பட்ட பொற் பழங்களுக்குச் சமானம் (நீதி 25:11) என்ற வசனத்தின்படி ஏற்ற சமயத்தில் அதற்கேற்ற பிரசங்க வாக்கியத்தை தெரிந்து கொள்ள ஒரு பிரசங்கி அறிந்திருக்க வேண்டும். வேத வாக்கியங்களெல்லாம். . . உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளு தலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோசனமுள்ளவை களாயிருக்கிறது (2. தீமோ 3:16,17) அவைகள் ஒவ்வொன்றையும் அதினதின் காலத்தில் பிரசங்கித்தால் அதிக பலனுண்டாகும் ஆகையால், பிரசங்க வாக்கியங்களைத் தெரிந்து கொள்வதில் ஒரு பிரசங்கி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

பிரசங்க வாக்கியத்தைத் தெரிந்து கொள்வது என்பது லேசான காரியமல்ல! பிரசங்க வாக்கியம் தெரிந்து கொள்ளுகிற ஒரு பிரசங்கி, ஆயிரக்கணக்கான அழகிய புஷ்பங்கள் நிறைந்த ஒரு பூந்தோட்டத்தில் ஒரே ஒரு புஷ்பத்தை மாத்திரம் பதித்துக் கொள்ளும் உத்தரவு பெற்ற புஷ்பப் பிரியன் ரோஜாவையோ, தாமரையோ, மல்லிகையையோ, லீலியையோ எதைப் பறிக்கலாம் என்று வெகு நேரம் திகைக்கிறது போல இருக்கிறார்!! இப்படிப்பட்ட திகிலும், திகைப்பும் எல்லா பிரசங்கிமார்களுக்கும் நேரிடுவது வழக்கம். ஆனால் இவைகளிலிருந்து நீங்கி தெளிந்தவராக இருக்க வேண்டுமெனில் வேத வாக்கியங்களை ஒவ்வொன்றையும் அதினதின் காலத்திற்கேற்ப பிரசங்கிக்க வாக்கியத்தை முன்கூட்டியே ஆயத்தமாக்கப்பட்டிருக்க வேண்டும். வாரம் இரண்டு பிரசங்க குறிப்புகளை ஆயத்தமாக்கிக் கொள்ளும் வழக்கத்தைப் பெற்றிருப்போ மேயாகில் பிரசங்கத்தைக் குறித்த திகிலும், திகைப்பும் ஏற்படாது.

விசுவாசிகளின் ஆன்மீக வளர்ச்சியைப் பொதுவாகவும், தனித்தனியாகவும் கவனித்து அவைகளுக்கேற்ற பிரசங்க வாக்கியத்தைத் தெரிந்து கொண்டு அவர்களுக்கு ஆன்மீக மருந்தாகவும், ஞான ஆகாரமாகவும் ஆயத்தம் செய்து கொடுக்க வேண்டியது பிரசங்கியின் கடமையாகும். இக்கடமைகளின் மேல் கவனம் செலுத்தாமல் விகடப் பிரியமான வார்த்தைகளும், ஐசுவரியமும், செல்வாக்கும் உள்ளவர்களின் பிரியத்திற் இசைந்த வார்த்தைகளும் பிரசங்கத்தில் கவனம் செலுத்தினால் பரிசுத்த

ஆவியானவரை துக்கப்படுத்துகிறோம் என்று பொருளாகும். தேவன் பட்சபாதமற்றவராயிருப்பது போல நமது பிரசங்கமும் பட்சபாதமற்றதாயிருக்க வேண்டும். சபையார் அனைவரின் பேரிலும் கரிசனை கொண்டு அவர்கள் துயரங்களில் ஆறுதல் கொடுக்கத்தக்கதான பிரசங்க வாக்கியத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

விசுவாசிகள் நாளுக்கு நாள் பக்தியில் வளரவேண்டுமெனில் அவர்களுக்கு ஆரோக்கியமான உபதேசம் போதிக்கபடவேண்டும். பிரசங்கி ஆரோக்கியமான உபதேசம் என்பது என்ன என்றும் ஆரோக்கியமற்ற உபதேசம் என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். ஆரோக்கியமான உபதேசம் என்பது அப்போஸ்தலரின் உபதேசம் அதுவே கிறிஸ்துவின் உபதேசமாகும். அதுவே கலப்படமற்ற ஞானப்பாலாகும். (அப் 2:42, மத் 28:20, 1 பேது 2:3) ஆரோக்கியமில்லாத உபதேசம், இவ்வுலகில் தோன்றியிருப்பதாக வேதம் கூறுகிறது. அது சுய இச்சைக்கேற்ற உபதேசம் இது தேவ சித்தத்திற்கு விரோதமான உபதேசமாகும் (2 தீமோ 4:3)

நமக்குத் தேவையான உணவு தானியங்களை தேவன் இப்பூமியில் முளைக்கும்படி செய்து கலப்படமற்ற தானியங்களாக விளையச் செய்து கொடுக்கிறார். ஆனால் மனிதனோ கலப்படமற்ற தானியங்களில் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் பல கலப்படப் பொருள்களைக் கலந்து விடுகிறான். இவைகள் எல்லாம் நாம் அறிந்ததே. அதே மாதிரியே இன்று நவீன போதகர்களில் சிலர் கிறிஸ்துவின் கலப்படமற்ற சுவிசேஷத்தில் கலப்படம் செய்து இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் என்று போதிக்கிறார்கள் (மாற்கு 16:15,16) மாதத்திற்கு ஒருமுறை கர்த்தர் பந்தி கொடுப்பதும் இவைகளெல்லாம் ஆண்டவரிடத்திலும், அவரால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலரிடத்திலும் கட்டளை பெறாதவைகளாகும். அவர்களிடத்தில் கட்டளை பெறாத கட்டளைகளை நாம் கைக் கொள்ளக்கூடாது. (2. தெச 2:14, 15) இப்படிப்பட்ட உபதேசமே ஆரோக்கியமற்ற உபதேசமாகும். பிரசங்கி ஆரோக்கியமான உபதேசத்தையே போதிக்க வேண்டும். சுவிசேஷத்தைக் குறித்தும் (1. கொரி 15:1–4) அதற்கு கீழ்படிகின்ற கட்டளைகளைக் குறித்தும் (மாற் 16:15,16) தேவனை ஆராதிக்கின்ற கட்டளைகளைக் குறித்தும் (யோ 4:23, 24, அப் 20:7, 1 கொரி 16:1, 2, அப் 2:42) திட்டமாக தெளிவாக அறிந்து அதையே சபையாருக்கு போதித்து அவைகளுக்கு மரண பரியந்தம் வரை உண்மையாயிருக்க வேண்டும் (வெளி 2:10) என புத்திகூற வேண்டும். இப்படிப்பட்ட வேத வாக்கியங்களே விசுவாசிகளுக்கு வளர்ச்சி அடைய பிரயோஜனமாயிருக்கிறது. ஆகவே பிரசங்கி ஆரோக்கியமான உபதேசத்தையே எப்பொழுதும் தெரிந்து கொள்ள வேண்டும்.

போதகர் பிரசங்க வாக்கியத்தை தெரிந்து கொள்ளும்போது முன் செய்த பிரசங்கத்தை கவனித்துப் பார்க்க வேண்டும். அப்படி கவனிக்கவில்லையாகில் மீண்டும் முன் செய்த பிரசங்கத்தையே திரும்பவும் செய்து சபையாரின் சலிப்பை வருவித்துக் கொள்ளும்படி ஆகிவிடும். இப்படி நடக்காமலிருக்கவே நமது பிரசங்கத்தை கவனித்துப் பார்ப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. பிரசங்கி எப்பொழுதும் ஒரே விசயத்தைப் பற்றி பிரசங்கியாமல் வேதாகமத்தில் பல விசயங்கல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியால் அவைகளை நன்றாக அறிந்திருந்து சபையாருக்கு போதிக்க தெரிந்து கொள்ள வேண்டும்.

பிரசங்கியார் எதைக் குறித்து பிரசங்கிக்கலாம் என்று திகைத்து நிற்காமல் அவ்வாக்கியத்தை திட்டமாக, தெளிவாக, மனப்பாடமாக ஆயத்தமாயிருக்க பழகிக் கொள்ள வேண்டும். போதகரே தெளிவில்லாமல் மனப்பாடமில்லாமல் திகைத்து நின்று உளறினால் சபையாரின் மனதில் எப்படி பதிக்க வைக்க முடியும்? ஆகவே பிரசங்கியார் தகுந்த ஆயத்தத்தோடு சபையாரின் முன்பு நிற்கவேண்டும். ஆயத்தமில்லாமல் சபையார் முன்பு நின்று வீணான விசயங்களைப் பேசி ஒரு மணி நேரத்தை வீண் போக்கக் கூடாது. அப்படி வீண்போக்குகிறவனுக்கு ஐயோ! திங்கட்கிழமை காலை முதல் சனிக்கிழமை இரவு மட்டும் ஏனோ, தானோவென்று நேரத்தைக் கழித்துவிட்டு வாரத்தின் முதல் நாளில் ஆராதனைக்கு இரண்டொரு மணி நேரத்திற்கு முன் ஒரு தூதன் வந்து தனது பிரசங்க வாக்கியத்தை கொடுப்பான் என்று நினைக்கிற பிரசங்கி, தேவனை பரீட்சை பார்க்கிறவராயிருக்கிறார். தேவன் நமக்கென வெளிப்படுத்தியிருக்கிற வேதாகமத்தை அனுதினமும் வாசித்து பிரசங்க வாக்கியத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

**K. பாஸ்கர், கோவில்பட்டி.**

# ஜாக்கிரதையாயிரு

*நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.*

**II தீமோ 2 : 15.**

# புதிய ஏற்பாட்டு சபை

வேதாகமத்தில், புதிய ஏற்பாட்டின் பகுதியில் "சபை" என்ற வார்த்தை 112 இடங்களில் காணப்படுகிறது. இந்த வார்த்தை இரு வகைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. "அந்தியோகியா பட்டணத்து சபை" (அப். 13:1) என்று கூறும் போது ஒரு பிராந்திய சபையை அல்லது கிறிஸ்தவர்களுடைய கூட்டத்தைக் குறிக்கிறது. அடுத்து உலக முழுவதும் உள்ள ஒரே சபையைக் குறிக்கவும் பயன்படுகிறது. உதாரணமாக, கொலோ. 1:18ல், கிறிஸ்து, ""சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்" என பவுல் எழுதுகிறார்.

பல நாமகரண கூட்டங்களால் நமது உலகம் இன்று நிரம்பி வழிகிறது. ஒரு நாமகரண கூட்டமானது பல பிராந்திய சபைகளின் ஒரு கூட்டமைப்பாக இருக்கிறது. இயேசுவால் அங்கீகரிக்கப்பட்ட "சபை" தாங்களே என்றும், உலகம் முழுவதும் உள்ள ஒரு சபையின் அங்கமாக தாங்கள் விளங்குவதாகவும், இப்படிப்பட்ட ஒவ்வொரு நாமகரணக் கூட்டமும் (பிரிவினை சபை) சவால் விட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, ஒரு நாமகரண கூட்டமானது, உலக முழுவதும் இயேசு கட்டி எழுப்பிய சபையை விட சிறிய ஒரு "சபை" யாகவும், அதே சமயத்தில் எந்த பிராந்திய சபையையும் விட பெரிதாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு அமைப்பைக் குறிப்பிட புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தை எங்கே பயன்படுத்தப்பட்டுள்ளது? இல்லையே? நாமகரண கிறிஸ்தவம் என்பது வேதாகமத்திற்கு முற்றிலும் புறம்பான கருத்தாகும்.

ஜெர்மனியில் ஒரு கத்தோலிக்க பாதிரியாக இருந்த மார்ட்டின் லூதரின் பணிக்குப் பின்னரே இன்றைய பல நாமகரணக் கூட்டங்களிலும் தோன்றின. 1500ம் ஆண்டின் தொடக்கத்திலே, கத்தோலிக்க சபையின் பல உபதேசங்கள் வேதாகமத்தின் உபதேசங்களுக்கு மாறுபாடானவைகளாக இருந்ததைச் சுட்டிக்காட்டி அவற்றிற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தார். அக்காலம் தொடங்கி பல பிரிவினை சபைகள் தோன்றியிருக்கின்றன. நமது காலத்திலேயும் புதியவைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய 1900 ஆண்டுகளுக்கு முன்பே புதிய ஏற்பாடு நிறைவு பெற்று விட்டது என்பதை நாம் அறிந்திருக்கும் போது, புதிய ஏற்பாட்டில் நாம் படிக்கும் சபையின் பகுதிகளாக இவை எவ்வாறு இருக்க இயலும்? இன்று காணப்படும் நாமகரணக் கூட்டத்தில் ஏதாவது ஒன்றில்

பேதுருவோ, யாக்கோபோ, யோவானோ அல்லது பவுலோ அங்கத்தினர்களாக இருந்தார்களா? அவர்கள் எந்த சபையில் அங்கம் பெற்றிருந்தார்களோ அதே சபையில் புதிய ஏற்பாட்டில் நாம் படிக்கும் அந்த சபையில் மட்டுமே நான் அங்கத்தினராக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

புதிய ஏற்பாட்டு சபையில் அங்கத்தினராக இருக்க வேண்டுமானால், முதலாம் நூற்றாண்டில் அவர்கள் எந்த நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தார்களோ அதே நற்செய்திக்கு நான் கீழ்ப்படிய வேண்டியவனாக இருக்கிறேன். அவர்கள் மேல் சுமத்தப்பட்ட அதே கட்டளைகளை நானும் கடைபிடிக்க வேண்டும். இயேசுவை கிறிஸ்து என்று விசுவாசிக்க அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. (எபி. 11:6; யோவான் 8:24). அவர்களுடைய பாவங்களுக்காக அவர்கள் மனஸ்தாபப்பட வேண்டியதாயிருந்தது. (அப். 2:38; லூக்கா 13:1, 5). மற்ற மக்கள் முன்னிலையில் கிறிஸ்துவின் பேரிலுள்ள அவர்கள் விசுவாசத்தை அறிக்கையிட வேண்டியவர்களாயிருந்தனர். (மத். 10:32, 33; ரோமர் 10:9, 10; அப். 8:37) அதன் பின்னர், அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்குப் பெற வேண்டியவர்களாயிருந்தனர். (அப் 2:38; 22:16) கிறிஸ்தவர்களான பின்பு, புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ள தேவனுடைய உபதேசங்களை தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

புதிய ஏற்பாட்டின் நற்செய்திக்கு நான் கீழ்ப்படியும் போது, நான் புதிய ஏற்பாட்டு சபையில் ஒரு அங்கத்தினராகிறேன். நான் ஒரு நாமகரண சபையில் அங்கம் பெறுவதில்லை, ஏனெனில் நாமகரண கிறிஸ்தவம் என்னும் கருத்து வேதாகமத்திற்கு முற்றிலுமாக புறம்பானதும், தேவனுக்குப் பிரியமற்றதுமாகும். "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்" (2 யோவான் 9) வெறும் மனிதர்களால் நிறுவப்பட்ட சபைகளில் இடம் பெறாமல், நாம் கிறிஸ்துவால் கட்டப்பட்ட சபையில் மட்டுமே அங்கம் வகிப்போம்.

**Ronnie Lowe** — எஸ்.எஸ். ராஜன்

# விசுவாசத்தின் அடிப்படைகள்

## பாடம் – 2

குறிப்பு 2 : துவக்கத்திலிருந்து மனிதனின் பிரச்சனை. அவனுடைய பாவம். தேவனின் தீர்வு. கிறிஸ்துவில் உருவகப்படுத்தப்பட்ட அவருடைய அபரிமிதமான அன்பு. அவருடைய குமாரன் இயேசு.

1. வேதாகமம் பாவத்தைக் குறித்து சொல்லுகிற விளக்கத்திலிருந்து ஆரம்பிப்போம்.

அ. "ஹமார்ஷயா" என்ற கிரேக்க வார்த்தை பாவம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

1. வைன், அவருடைய புதிய ஏற்பாட்டு அகராதியில் இந்த வார்த்தைக்கு ஒரு திசையிலிருந்து மாறிவிடுவது, தகுதியிலிருந்து குறைந்து விழுந்து போவது என்று விளக்குகிறார்.

2. தேயர் தன்னுடைய கிரேக்க – ஆங்கில அகராதியில் – தப்பாக செய்யப்பட்ட ஒன்று, ஒரு குற்றம், நினைவிலோ, செயலிலோ தேவனுடைய சட்டத்தை மீறுவது என்று பொருள் கொள்கிறார்.

ஆ. புதிய ஏற்பாட்டு வசனங்கள்

1. 1 யோவான் 3:4.

2. 1 யோவான் 5:17

3. யாக்கோபு 4:17

நம்முடைய தலைப்பு துவக்கத்திலிருந்தே மனிதனுடைய பிரச்சனை என்பது. ஆகவே, நாம் துவக்கத்திலிருந்தே மனித வரலாற்றில் அதுகுறித்து பல மாதிரிகளைப் பார்ப்போம்.

2. 1. ஏதேன் தோட்டத்திலே நன்மை தீமை அறியத்தக்க மரத்தில் கனியைப் புசிக்கக் கூடாது என்ற தேவனுடைய கட்டளையை மீறியதினால் ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தார்கள்.

2. உலகம் : நோவாவின் காலத்தில் (ஆதியாகமம் 6:5, 13) தேவனுடைய வழிகளை மீறினார்கள். கொடுமை நிறைந்தவர்களாயிருந்தார்கள்.

3. சோதோம், கொமோரா (ஆதி 13:13, 18:20, 2 பேதுரு 2:7,8) பொல்லாங்கு நிறைந்து மிக அதிகமான பாவம், ஒழுக்கக் கேடுகள் நிறைந்த வாழ்க்கை நியாயமற்ற செயல்கள்.

4. நியாயாதிபதிகளின் காலம் (நியாயாதிபதிகள் 17:6) ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பார்வையில் சரியானதைச் செய்தான்.

5. இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாக பிரிந்த காலத்தில் : தேவனை விட்டுவிட்டார்கள், தேவனைவிட மனித சக்திகளிடம் உதவியை எதிர்ப் பார்த்தார்கள். அந்நிய தேசத்து பொய்யான தேவர்களை வணங்கினார்கள். அவர்களுடைய பாவச் செயல்களில் பங்கு பெற்றார்கள்.

3. பாவம் எப்படி நம்முடைய வாழ்வில் கிரியை செய்கிறது.

1. ஏதேன் தோட்டத்தில் எவ்வாறு கிரியை செய்தது (ஆதி 3:6) புசிப்பதற்கு நல்லது (மாம்சத்தின் இச்சை) பார்வைக்கு இன்பமானது (கண்களின் இச்சை) ஒருவனை அந்த மரம் ஞானவனாக்கும். (பெருமை)

2. யோவான் 2:16

3. யாக்கோபு 1:14, 15.

பாவத்தின் முடிவு என்ன?

1. ஏசாயா 59:1, 2

2. யாக்கோபு 1:15.

3. ரோமர் 6:23

4. யோவான் 8:21.

மனிதனுடைய பிரச்சனைக்கு தேவனுடைய பதில்.

1. முன்னுரைக்கப்பட்டது ஏசாயா 3:5, 6, 12.

2. அவருடைய நோக்கம் யோவான் 3:16.

3. தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்பட்டது.

1. மத்தேயு 1:21

2. மத்தேயு 2:1

மனித வர்க்கத்திற்கு இரட்சிப்பை அருள தேவன் கொடுத்த விலை என்ன?

1. எபிரேயர் 9:22

2. 1 பேதுரு 1:18, 19.

3. எபேசியர் 1:17.

4. வெளிப் 1:5.

இயேசு இரட்சிக்கும் இரத்தத்தின் பலனை மனிதன் எப்படி பெறுகிறான்?

1. பழைய பிரமாணத்திலா கிரியைகளாலா? அல்லது மனித சட்டங்களாலா, பழக்கவழக்கங்களாலா, பாரம்பரியங்களாலா

   1. ரோமர் 3:20
   2. அப்படி இல்லாவிட்டால் அதற்குப் பதில் என்ன. ரோமர் 3:20, 28.
   3. அது இன்று அநேகரால் போதிக்கப்படுகிறதா, விசுவாசம் மட்டுமா யாக்கோபு 2:14–26.
   4. இயேசுவோடு நெருங்கி இருக்கும்படி நம் பாவங்கள் போகத்தக்கதாக எப்படி நம்முடைய விசுவாசம் அறிக்கைப் பண்ணப்பட வேண்டும்.

வேதம் என்ன சொல்கிறதென்று பார்ப்போம் :–

லூக்கா 13:3 – மனந்திரும்பு

ரோமர் 10:9, 10 – இயேசுவை கர்த்தரென்று அறிக்கை செய்.

மாற்கு 16:16 – இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெறு.

அப். 2:39 – பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம்

அப் 10:47 – கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட

அப் 22:16 – உன் பாவங்கள் கழுவப்பட.

ஞானஸ்நானத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் மற்ற பகுதிகள் என்ன சொல்கின்றன?

1. ரோமர் 6:3, 4, 17, 18.
2. 1 கொரிந்தியர் 12 : 13.
3. கலாத்தியர் 3:26–27.
4. எபேசியர் 4:5
5. கொலொசேயர் 2:12 – 13.
6. 1 பேதுரு 3: 20, 21.

தேவனின் பார்வையில் இப்பொழுது இந்த வேத வசனங்களையெல்லாம் மனதிற்கொண்டு பார்க்கையில் ஞானஸ்நானம் அவசியமானதா. விருப்பப்படி செய்ய வேண்டியதா?

ஞானஸ்நானம் பெற்ற பின் நாம் பாவம் செய்தால் என்ன நிகழ்கிறது? தேவன் ஏதாகிலும் வழிவகை வைத்திருக்கிறாரா?

1. முதலாவது கிறிஸ்தவனான பின்பு பாவம் செய்தால் நாம் மோசமானவர்களா?

மனதில் முதலாவது நம்முடைய பாவங்கள் தேவனையும் அவருடைய குமாரனையும் எவ்வளவு வேதனைப்படுத்தும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

2. நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்பதற்காக அவர் கொடுத்த விலை அதாவது தியாகம் என்ன என்பதை எண்ணிப்பாருங்கள்.

3. நாம் மனிதர்களாயிருப்பதால் சமயங்களில் பாவத்தில் விழுந்து போவோம் என்பது தேவனுக்குத் தெரியும் என்கிற அறிவோடு சேர்த்துப் பார்க்கவேண்டும்.

1. ரோமர் 3: 23.

2. 1 யோவான் 1 : 8

தேவனுடைய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் அவர் நம்மை நன்றாகத் தெரிந்து ஆழமாக நேசிப்பதால் நம்முடைய பாவ மன்னிப்புக்கென்று வழி வை ;திருக்கிறார்.

1. I. யோவான் 1:7

2. அப்போல் 8:22

3. 1 யோவான் 1:9.

வஞ்சிக்கப்படாதிருங்கள் அது பாவத்திற்கு எதிரான ஒரு நிரந்தர போராட்டமாகும்.

1. பேதுரு 5:8

2. லூக்கா 22:31

3. எபேசி 6:12

ஆனால் தற்காப்புக்கான வழியில்லாமல் தேவன் நம்மை விட்டுவிடவில்லை.

1. எபேசியர் 6:10

2. எபேசி 6:11-17 தேவனுடைய சர்வாயுத வர்க்கங்கள்

3. 1 யோவான் 2:14

4. யாக். 4:7

G. தானியேல்

**Charlie Di palma**

(தொடரும்)

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20,
THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER BOOK - POST

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701